**தலைப்பு 272– குருநாகல் மாவட்ட செயலகம்**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

(அ) அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை அரசாங்க நியதிகளுக்கு இணங்கும் விதத்தில் அமுல்படுத்துவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பும் வழிகாட்டலும்.

(ஆ) பிரதேச செயலகங்களின் செயற்பாடுகளை ஒழுங்கிணைத்தலும் வழிகாட்டலும்

(இ) நியதிச்சட்ட சட்ட விதிகளால் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுதல்

(ஈ) ஏனைய வரிசை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் மாவட்ட முகவர் நிறுவனமாக செயற்படுதல்.

(உ) மாவட்டத்தினுள் சட்டம், ஒழுங்கு என்பவற்றை பேணுவதற்கும், மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், பாதுகாப்புத் தரப்பினருடன் சம்பந்தத்தை ஏற்படுத்தல்.

(ஊ) அரசாங்க வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் அரசாங்க வருமானத்தைச் சேகரித்துக் கணக்கீடு செய்யும் நிலையமாகச் செயற்படுதல்.

## 1.2 மாவட்டசெயலகத்தின் கீழ் உள்ளபிரதேசசெயலகங்கள்

(அ) குருநாகல்
(ஆ) பன்னல
(இ) வாரியபொல
(ஈ) இப்பாகமுவ
(உ) கனேவத்த
(ஊ) மஹவ
(எ) கிரிபாவ
(ஏ) அம்பன்பொல
(ஐ) பண்டுவஸ்நுவர (மேற்கு)
(ஒ) பண்டுவஸ்நுவர (கிழக்கு)
(ஓ) குளியாபிட்டிய (மேற்கு)
(ஔ) குளியாபிட்டிய (கிழக்கு)
(க) அலவ்வ
(ங) மாவத்தகம
(ச) பொல்கஹவெல
(ஞ) ரிதீகம
(ட) மல்லவபிட்டிய
(ண) மாஸ்பொத
(த) பிங்கிரிய
(ந) நாரம்மல
(ப) பொல்பிதிகம
(ம) கல்கமுவ
(ய) எஹெடுவெவ
(ர) நிக்கவெரடிய
(ல) கொபெய்கனே
(வ) ரஸ்னாயகபுர
(ழ) கொடவெஹெர
(ள) வீரம்புகெதர
(ற) பமுனாகொடுவ
(ன) உடுபத்தாவ

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

குருநாகல் மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்தோபா் 22 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமா்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினா், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடியவகையில் தயாரிக்கப்பட்னவாகும்.

**1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமா்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தா்களினதும் கணக்கீட்டு உத்தியோகத்தா்களினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூா்வமாகச் சமா்ப்பித்தல் தொடா்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்கும்.

**1.5 கணக்காய்வு அவதானிப்புகள்**

2013 திசெம்பா் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் குருநாகல் மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இங்கே (அ) இலிருந்து (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 இலிருந்து 1.18 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு காண்புகளைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை**

2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின்படி, மாவட்டச் செயலகம் கணனிகள், துணைப் பாகங்கள் மற்றும் வன் பாகங்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை பேணியிருக்கவில்லை.

**(ஆ) கணக்காய்விற்கான சான்றின்மை**

கிரிபாவ பிரதேச செயலகத்திற்குரிய, நிதிப்பிரமாணம் 272(2) இன் பிரகாரம் நடவடிக்கை பூரணப்படுத்தப்படாத ரூபா 1,800 பெறுமதியான கொடுப்பனவு உறுதிச்சிட்டையொன்று காணாமல் போயிருந்தது.

**(இ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

மாவட்ட செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,398,406,025 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 1,398,236,067 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 169,958 அல்லது 0.01 சதவீத ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | | | சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 1,361,906,025 | 1,361,898,686 | 7,339 | 0.00 |
| மூலதனம் | 36,500,000 | 36,337,381 | 162,619 | 0.45 |
| **மொத்தம்** | **1,398,406,025** | **1,398,236,067** | **169,958** | **0.01** |

**(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய 28 அமைச்சுக்களிடமிருந்தும் 19 திணைக்களங்களிடமிருந்தும் ரூபா 8,540,969,924 கூட்டு மொத்தமான நிதி ஏற்பாடு மாவட்ட செயலகத்திற்குக் கிடைத்திருந்ததுடன், இதில் முறையே ரூபா 3,853,111,538 மற்றும் ரூபா 3,654,468,391 ஆக ரூபா 7,507,579,929 கூட்டு மொத்தத் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, மீளாய்வாண்டின் இறுதியளிவில் முறையே ரூபா 994,963,282 மற்றும் ரூபா 38,426,713 என ரூபா 1,033,389,995 கூட்டுத் தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அச்சேமிப்பானது பெறப்பட்ட நிதியேற்பாட்டில் முறையே 21 சதவீதத்திற்கும் 1 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

குருநாகல் மாவட்டச் செயலகத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவு | | பெறுவனவுகள் | | வரவுமீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 27201 | 95,000,000 | 54,413,604 | 69,000,000 | 74,328,658 | 375,000,000 | 261,515,647 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 27201 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 4,685,974 கூட்டுத் தொகையாக காணப்பட்டதுடன், அதில் ரூபா 2,003,449 01 ஆண்டிற்கும் மேலான காலமாக அறவிடப்பட வேண்டியிருந்தது. அந்த நிலுவை மீதிகளது அறவீடுகளின் பின் தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

(ii) வாரியபொல பிரதேச செயலகப் பிரிவில் பணியாற்றிய கிராம உத்தியோகத்தர் ஒருவர் 2013 யூன் 12 ஆந் திகதி பதவி நீங்கிச் சென்றிருந்ததுடன், அத்திகதியில் உள்ளவாறு அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவையான ஆதனக் கடன் மீதி ரூபா 150,775 ஆகும். அதற்காக பிணையாக வைக்கப்பட்டிருந்த ஆதனம் போலியான உரித்துறுதி தயாரிக்கப்பட்டு வேறொருவருக்கு விற்பனை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

**(உ) பொது வைப்புக் கணக்குகள்**

மாவட்டச் செயலகத்தில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6003/000/00/0048/0000/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 460,847,238 ஆகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட 09 பிரதேச செயலகங்களிற்குரிய ரூபா 3,885,652 கூட்டுத் தொகையான வைப்புகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் பல்வேறு கருமங்களிற்காகவும் 09 பிரதேச செயலகங்களிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 3,927,004 குறித்த கருமங்களை நிறைவேற்றாது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(iii) காணிகளிற்கான இழப்பீடுகளைச் செலுத்துவதற்காக பல்வேறு நிறுவனங்களால் 07 பிரதேச செயலகங்களிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 5,304,301 கூட்டுத் தொகையான பணம் குறித்த தரப்பினர்களை இனங்கண்டு தீர்வு செய்யப்படாது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(iv) 2010 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை 03 சந்தர்ப்பங்களில் கிடைத்திருந்த ரூபா 100,000 கூட்டுத் தொகையான ஊனமுற்றோர் வீடமைப்பு உதவிகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

## 1.6 நல்லாளுகை மற்றும் கணக்களிப்பொறுப்பு

### 1.6.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தினது கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் பிரகாரம், மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் 2013 மார்ச் மாதத்திலேயே தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.6.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 உள்ளகக் கணக்காய்வு

சிரேஷ்ட கணக்காளர் ஒருவர் பிரதான உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் பிரதேச செயலகங்களின் கொடுக்கல் வாங்கல்கள் பரிசோதிக்கப்பட்டு அறிக்கைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், மாவட்ட செயலகத்தின் கொடுக்கல் வாங்கல்கள் அதன் மூலம் பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்காக சிரேஷ்ட மற்றும் அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்களை போதியளவில் ஈடுபடுத்துவதற்குப் பதிலாக மாவட்ட செயலகத்தில் இணைக்கப்பட்ட பட்டதாரி உத்தியோகத்தர்கள் அதிக எண்ணிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

### 1.6.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை செயற்படுத்தல்

2013 ஆம் ஆண்டில் 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்டச் செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

| சொத்து வகை | பிரதேச செயலகம் | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்திய காலம் |
|---|---|---|---|
| (i) காணிகள் (ஹெக்டயார்) | அலவ்வ | 01 (அலகுகளின் எண்ணிக்கை காட்டப்படவில்லை. பி.செ. உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள காணி) | ஏறத்தாழ 13 ஆண்டுகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | கட்டிடங்கள் | அலவ்வ | 01 (பி.செ. உத்தியோகபூர்வ இல்லம்) | ஏறத்தாழ 13 ஆண்டுகள் |
| (iii) | மோட்டார் வாகனங்கள் | கொபெய்கனே | கெப் வாகனம் - 01 | ஏறத்தாழ 01 ஆண்டு |
| | | ரஸ்னாயகபுர | மோட்டார் சைக்கிள் - 01 (ஹீரொ ஹொன்டா) | காட்டப்படவில்லை. |
| | | கொடவெஹர | கை உழவு இயந்திரம் - 01<br>ரேலர் - 01 (பதிவு இலக்கம் காட்டப்படவில்லை)<br>மோட்டார் சைக்கிள் - 01 | 1993 முதல்<br>1993 முதல்<br>1993 முதல் |
| (iv) | இயந்திராதிகள் | ரஸ்னாயகபுர | உயரத்தை அளக்கும் உபகரணம் - சிறுவர் 01<br>தொலைபேசி – 01<br>சைக்கிள் - 01<br>நீர் சுத்திகரிப்பான் - 01<br>சுவர்க் கடிகாரம் - 03 | 2007 இற்கு முன்பிருந்து<br>2007 இற்கு முன்பிருந்து<br>2007 இற்கு முன்பிருந்து<br>2007 இற்கு முன்பிருந்து<br>2007 இற்கு முன்பிருந்து<br>2007 இற்கு முன்பிருந்து |
| | | கொடவெஹர | கணித்தல் இயந்திரங்கள் - 08<br>புகைப்படப் பிரதி இயந்திரம் - 01<br>கண்ணாடி வெட்டும் இயந்திரம் - 01<br>கினிஹிர – 01<br>கத்தி தீட்டும் கல் - 01 | 2007 இற்கு முன்பிருந்து<br>2007 இற்கு முன்பிருந்து<br>1993 முதல்<br>1993 முதல்<br>1993 முதல் |
| (v) | ஏனைய சொத்துக்கள் | ரஸ்னாயகபுர | தோற்பைகள் - 08 | 2007 இற்கு முன்பிருந்து |
| | | அம்பன்பொல | 500 லீற்றர் நீர்த் தாங்கி – 13<br>1000 லீற்றர் நீர்த் தாங்கி – 12 | காட்டப்படவில்லை. |

(vi) மாஸ்பொத பிரதேச செயலகத்தில் கைவிரல் அடையாளமிடல் இயந்திரம் கணனி வலையமைப்புடன் இணைக்கப்பட்டிருந்த போதிலும், தொழில்நுட்பக் காரணங்களால் அதிலிருந்து அறிக்கைகளை பெறமுடியாதிருந்தமையால் அது குறைந்தளவில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(vii) 2012 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டின் கீழ் பிங்கிரிய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புகளிற்கு வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 40,940

பெறுமதியான 07 உபகரணங்கள் ஓராண்டிற்கும் மேற்பட்ட காலமாக களஞ்சியத்தில் வைத்திருகக்ப்பட்டிருந்தமையால் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

---

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளின் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளினால் அழிப்பதற்காக பரிந்துரைக்கப்பட்டிருந்த அதிகளவான பழுதடைந்த பொருட்கள் அலுவலக வளவின் பல்வேறு இடங்களிலும் குவித்து வைக்கப்பட்டிருந்தன. பல வருடங்களாக பயன்படுத்த முடியாதிருந்த பதிவேட்டு பொருள் இருப்பும் அலவ்வ பிரதேச செயலக களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(ii) கொபேய்கனே பிரதேச செயலகத்தினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணிவரப்படாதிருந்ததுடன், நிறுவனத்திற்கு உரித்தற்ற வாகனமொன்று சொத்துக்கள் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், காணிகள், கட்டிடங்கள் மற்றும் 02 வாகனங்கள் என்பன நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சமூக சேவைகள் மற்றும் சமூக நலனோம்பல் அமைச்சிடமிருந்து கொபயகனே பிரதேச செயலகத்திற்கு 2008 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த சிங்கர் வகையைச் சேர்ந்த 05 தையல் இயந்திரங்களும் ஒரு ஓவர்லொக் இயந்திரமும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அது குறித்து கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், 2013 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வுக்கு அச் சொத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மாஸ்பொத பிரதேச செயலகம் 2013 ஆம் ஆண்டின் இறுதியளவிலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டைப் பேணியிருக்கவில்லை.

(v) கனேவத்த பிரதேச செயலகத்தின் 2012 இன் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் மூலம் திருத்திப் பயன்படுத்தப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டிருந்த மின்பிறப்பாக்கியினை திருத்தாமை காரணமாக 2013 ஆம் ஆண்டிலேனும் பயன்படுத்தப்பட முடியாதிருந்தது.

(vi) 2009 இன் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பரிந்துரையின் பிரகாரம், விற்பனை செய்யப்பட்டிருந்த புகைப்படப் பிரதி இயந்திரம் 2013 ஆம் ஆண்டின் இறுதியிலேனும் கொள்வனவாளரால் எடுத்துச் செல்லப்படாமை காரணமாக கனேவத்த பிரதேச செயலக களஞ்சியத்தில் காணப்பட்டது.

**(இ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாஸ்பொத பிரதேச செயலகம் அமைந்துள்ள காணியினை வடமேல் கல்வித் திணைக்களத்திடமிருந்து முறையாக கையேற்காது திறைசேரி மானியங்களைப் பயன்படுத்தி அதில் 2007 ஆம் ஆண்டு முதல் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(ii) உரிமை அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டிராத 10 பர்சஸ் தனியார் காணியில் ரூபா 1,625,002 செலவில் பிங்கிரிய பலநோக்கு அபிவிருத்தி கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புகள்**

மாவட்டச் செயலகத்தினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த பொறுப்புகள் ரூபா 20,958,186 கூட்டுத்தொகையாக காணப்பட்டதுடன், அதில் ரூபா 15,384,370 தொகை 01 ஆண்டிற்கு மேலாகவும் 03 ஆண்டுகளிற்கு குறைவாகவும், ரூபா 5,573,816 ஓராண்டிற்குக் குறைவாகவும் நிலவி வந்திருந்தன.

## 1.8 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
| --- | --- | --- |
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை** | | |
| XIX ஆம் அத்தியாயத்தின் 5 மற்றும் 6 ஆம் பிரிவுகள் | - | (i) குருநாகல் மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான உத்தியோகபூர்வ மற்றும் பொது மனைகளில் வசிக்கும் 16 பேரிடமிருந்து (கணவன்/மனைவி) வருடாந்த சம்பள ஏற்றங்கள் மற்றும் சம்பள திருத்தங்களினால் அதிகரிக்கப்பட்ட பெறுமதிகளையும் கருத்திற்கொண்டு வதிவிட வாடகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களிடமிருந்து உத்தியோகபூர்வ மற்றும் பொது மனைகளை கையேற்ற தினத்தில் நிலவிய சம்பளத்தின் அடிப்படையில் நிலையானதொரு வாடகை அறவிடப்பட்டிருந்தது.<br>(ii) குளச் சுற்றுவட்டத்தில் அரசாங்க பொதுச் சேவை மனை ஒன்றில் 2012 யூன் 18 ஆந் திகதி முதல் சட்டரீதியாக குடியிருப்பதற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தருக்குப் பதிலாக அனுமதியற்ற வேறொரு அரசாங்க உத்தியோகத்தர் குடியிருக்கின்றமை களக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டது. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை** | | |
| (i) நிதிப்பிரமாணம் 1645 | - | கொபெய்கனே பிரதேச செயலகத்திற்கு சொந்தமான இரண்டு வாகனங்களின் நாளாந்த வாகன ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) நிதிப்பிரமாணம் 1645 (அ) | | மாஸ்பொத பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இரண்டு வாகனங்களின் சம்பவப் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |

**(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை**

| | | |
|---|---|---|
| 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | மாவட்டச் செயலகத்தினதும் 30 பிரதேச செயலகங்களினதும் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஈ) தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை**

| | | |
|---|---|---|
| 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1:1:6 ஆம் பிரிவு | 252,712 | பண்டுவஸ்நுவர (கிழக்கு) மற்றும் நிக்கவெரட்டிய பிரதேச செயலகங்களிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் இரண்டு மாதத்தினுள் தீர்க்கப்பட்டிருகக்வில்லை. |

**(உ) ஏனைய சுற்றறிக்கைகள்**

| | | |
|---|---|---|
| 2012 ஒக்தோபர் 23 ஆந் திகதிய A2/வற்/சுற்/2012/04 ஆம் இலக்க வனப் பாதுகாப்பு நாயகத்தின் கடிதம் | 7,948 | வாரியபொல பிரதேச செயலகத்தினால் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் வருமானத் தலைப்பின் கீழ் சேகரிக்கப்பட்ட பணம் அடுத்துவரும் மாதத்தின் முதலாம் வாரத்தினுள் அனுப்பிவைக்கப்படாதிருந்ததுடன், அனுமதிப் பத்திரக் கட்டணப் பதிவேடும் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |

## 1.9 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் பலவீனங்கள்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல், செயற்திட்டங்களை பூரணப்படுத்தாது கைவிடுதல் மற்றும் செயற்திட்டத் தாமதங்கள் தொடர்பில் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல்**

---

மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள 06 பிரதேச செயலகங்களினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | ஆரம்பிக்கமைக்கான காரணங்கள் சுருக்கமாக |
|---|---|---|---|
| | ரூபா | | |
| 6 பிரதேச செயலகங்களில் பன்முகப்படுத்தப்பட்ட, கிராம எழுச்சி, வயம்ப மறுமலர்ச்சி, நாட்டுக்கு மகுடம் செயற் திட்டங்களின் வீதிகள், கட்டி டங்கள், குடிநீர் திட்டங்கள் உள்ளடங்கலான 49 செயற் திட்டங்கள் | 13,757,740 | 2013.02.02 தொடக்கம் 2013.12.28 வரையான திகதிகள் | பொறுப்பேற்ற ஒப்பந்தகாரரர்கள் பணிகளை நிறைவேற்றாமை, போதியளவு நிதி ஏற்பாடு காணப்படாமை, நிதி ஏற்பாடு தாமதமாக மேற்கொள்ளப்பட்டமை, சீரற்ற காலநிலை, காணிப் பிரச்சினைகள் ஏற்பட்டமை, வீதி எழுச்சி இன் கீழ் நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை, நாட்டுக்கு மகுடம் அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக நிறைவேற்ற முடியாதிருந்தமை |

**(ஆ) செயற்திட்டங்களை பூரணப்படுத்தாது கைவிடுதல்**

---

மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள 05 பிரதேச செயலகங்களினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அச் செயற்திட்டங்கள் பூரணப்படுத்தப்படாது கைவிடப்பட்டிருந்தன.

| பிரதேச செயலகம் | செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடி செலவினம் | கைவிடப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | ரூபா | |
| மாஸ்பொத | சாரகம சனாதிபதி மகளிர் கல்லூரியில் குடிநீர் கிணறு நிர்மாணித்தல் (5,000 ஆரம்ப பாடசாலைகள் நிகழ்ச்சித்திட்டம்) | 693,825 | 2013.05.14 | 227,098 | வெட்டப்பட்ட கிணறு இடிந்து விழுந்தமை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொல்கஹவல | 03 தண்ணீர் செயற்திட்டங்கள் | 3,633,551 | 2012.08.20 தொடக்கம் 2012.11.28 வரை | காட்டப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட அமைப்பு ஒப்பந்தத்தை நிறைவேற்றாது புறக்கணித்தமை |
| பன்னல | பன்முகப்படுத்தப்பட்ட செயற்திட்டம் 01 | 14,549 | 2013.10.31 | காட்டப்பட்டிருக்கவில்லை. | குறித்த இடத்தில் நிர்மாணிக்காமை |
| | வயம்ப மறுமலர்ச்சி செயற்திட்டங்கள் 05 | 555,229 | 2013.09.11 தொடக்கம் 2013.12.19 வரை | காட்டப்பட்டிருக்கவில்லை. | காலம் போதாமை காரணமாக வேலைகளை பூரணப்படுத்த முடியாமை |
| குளியாபிடிய | வயம்ப மறுமலர்ச்சி – சிறிய நீர்ப்பாசன செயற்திட்டம் 01 | 197,764 | 2013.11.06 | காட்டப்பட்டிருக்கவில்லை. | வயல் வேலைகள் முடியும் வரை அமுல்படுத்தாமை |
| மஹவ | வீதிச் செயற்திட்டங்கள் 04 | 245,857 | 2013.09.16 மற்றும் 2013.10.03 | காட்டப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்த போதிலும், கிராமமக்களின் எதிர்ப்பு |

**(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள 04 பிரதேச செயலகங்களில் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| பிரதேச செயலகம் | செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூரணப்படுத்த வேண்டிய திகதி | பூரணப்படுத்திய திகதி | 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடி செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | | ரூபா | |
| ரிதீகம | நீர் செயற்திட்டம் - 01<br>சிறிய நீர்ப்பாசனம் - 03 | 7,136,720 | 2013.10.11<br>2013.12.18, 19, 26 | 2013.12.31 | - | 88,480 | நிதி ஏற்பாடுகள் தாமதமடைந்தமையால் காலம் போதாமை |
| இப்பாகமுவ | தேசத்துக்கு மகுடம் - சிறிய நீர்ப் பாசனம் - 02 | 2,308,760 | 2013.12.24<br>2013.12.30 | 2013.12.31 காட்டப்பட்டிருக்கவில்லை | - | 216,627 | காலம் போதாமை |
| பன்னல | வயம்ப மறுமலர்ச்சி – சிறிய நீர்ப் பாசனம் - 03 | 396,000 | 2013.08.30<br>2013.10.23, 24 | 2013.11.30<br>2013.12.08 | - | 356,400 | மழை மற்றும் மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் சிக்கல் |
| பண்டுவஸ் நுவர (கிழக்கு) | குளிக்கும் இடம்- 02<br>குளப் புனரமைப்பு – 17<br>சிறிய நீர்ப் பாசனம் - 01<br>மதகுகள் - 01<br>கால்வாய் - 01 | 12,548,829 | 2013.12.04 தொடக்கம் 2013.12.26 வரை | 2013.12.31 | - | 1,099,971 (05 செயற்திட்டங்களிற்கு) | காலம் போதாமை, குளங்களில் நீர் நிரம்பிக் காணப்பட்டமை |

**(ஈ) பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல் முன்னேற்றம் இல்லாத செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வயம்ப மறுமலர்ச்சியின் கீழ் 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் 36 மின்சார விநியோக விஸ்தரிப்பு செயற்திட்டங்களிற்காக ரூபா 9,952,600 விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றிற்கு பணம் செலுத்தாமை காரணமாக ஆண்டின்போது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பன்முகப்படுத்திய பாதீட்டின் கீழ் 08 பிரதேச செயலகப் பிரிவுகளில் 14 மின்சார செயற்திட்டங்களிற்காக ரூபா 2,092,036 ஆண்டின் இறுதியில் மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அச் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 வயம்ப மறுமலர்ச்சியின் கீழ் 07 பிரதேச செயலகப் பிரிவுகளில் 36 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 4,490,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அச் செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கொபெய்கனே பிரதேச செயலகப் பிரிவில் 2012 இன் பன்முகப்படுத்திய பாதீட்டின் கீழ் 05 மின்சார செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 420,000 இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 40,000 தொகைக்கான ஒரு செயற்திட்டம் மாத்திரம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ரூபா 55,000 தொகைக்கான செயற்திட்டம் வேறு மின்சார விஸ்தரிப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தமையால் மாற்றுச் செயற்திட்டமொன்றை உருவாக்குவதற்கு அல்லது அப் பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.10 செயலாற்றல்

2013 இன் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின்படி மாவட்டச் செயலகத்தின் செயன் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள் தமது நோக்கங்களுடன் தொடர்புடைய பணிகளுக்குப் புறம்பாக செயற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், தெரிவுப் பரிசோதனைகளில் அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(i) 2012 இன் வாழ்வாதார எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 11,475,164 செலவிடப்பட்டு 54,870 கோழிக் குஞ்சுகள் 5,487 குடும்பங்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிற்கமைய,இந்த நிகழ்ச்சித்திட்டம் அடிப்படை நோக்கங்களிலிருந்து விலகி நிறைவேற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- 2012 யூலை 10 ஆந் திகதிய 2/2012 ஆம் இலக்க வாழ்வாதார எழுச்சி சுற்றறிக்கையின் அறிவுரைகளிற்கு முரணாக ஊர் கோழிக் குஞ்சுகளிற்கு பதிலாக பண்ணைக் கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டிருந்தமை.
- வழங்கப்பட்டிருந்த பண்ணை கோழிக் குஞ்சுகளை பராமரிப்பதற்கு அதிகளவு கிரயத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தமை மற்றும் சுற்றாடல் நிலமைகளிற்கு பொருந்தாமையால் கூடுகளில் விசேட நிலைமையின் கீழ் பராமரிக்க வேண்டியேற்பட்டிருந்தமை.
- தொடர்ச்சியான கோழி வளர்ப்புக்குத் தேவையான குஞ்சுகளை அந்த முட்டைகளைக் கொண்டு இனவிருத்தி செய்ய முடியாதிருந்தமை.
- நலனாளி ஒருவர் கோழிக் குஞ்சுகளைப் பராமரிக்கையில் ஏறத்தாழ ரூபா 13,517 நட்டத்தை ஏற்கவேண்டியிருந்தமை.
- பாலின வகைப்படுத்தலை மேற்கொள்ளாது கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டிருந்தமையால் சேவல் குஞ்சுகளும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தமை.
- நலனாளிகளிற்கு பண்ணைக் கோழிக் குஞ்சுகள் வளர்ப்பு தொடர்பில் முறையான பயிற்சி வழங்கப்பட்டிருக்காமை.
- அதிக எண்ணிக்கையான கோழிக் குஞ்சுகள் நோய்வாய்ப்பட்டமை காரணமாக மரணமடைந்திருந்தமை.
- உரிய பின் தொடர் செயற்பாடுகள் செயற்படுத்தப்படாமை காரணமாக சரியான தரவுகள் அறிவிக்கப்பட்டிருக்காமை.
- வாழ்வாதார எழுச்சி சுற்றறிக்கையின் அறிவுரைகளிற்கு முரணாக பேரளவில் கோழிப் பண்ணைகளை நடாத்திச் செல்கின்ற நபர்களிற்கும், (நாரம்மல பிரதேச செயலகப் பிரிவு) ஒரே குடும்பத்திலுள்ள கணவன் மற்றும் மனைவிக்கும் கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டிருந்தமை. (மஹவ பிரதேச செயலகப் பிரிவு)

(ii) கொபெய்கனே பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சிறு பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக 18 நலனாளிகளிற்கிடையே மாட்டுத் தொட்டிகளை நிர்மாணித்துக் கொள்வதற்காக ரூபா 617,400 பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 102,900 மொத்தமான உதவிகளைப் பெற்றுக்கொண்ட மூன்று நலனாளிகள் உரிய விதத்தில் மாட்டுத் தொட்டில்களை நிர்மாணிக்காதிருந்ததுடன் நலனாளிகள் மாடு வளர்ப்பில் ஈடுபடாதிருந்தமையும் களப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது.

**(ஆ) போதியளவில் அடையப்படாத பிரதான பணிகள்**

மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள கீழே குறிப்பிடப்பட்ட பிரதேச செயலகங்கள் தமது பிரதான பணிகளைப் போதியளவில் நிறைவேற்றியிராததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(i) 2011 கிராம எழுச்சி செயற்திட்டத்தின் மூலம் அலவ்வ பிரதேச செயலகப் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 80 குடும்பங்களிடையே ரூபா 251,700 செலவிடப்பட்டு 800 கோழிக் குஞ்சுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும், குறைந்த வருமானம் பெறுவோர்களின் வாழ்க்கைத் தரம், போசாக்கின்மை மற்றும் சுய தொழில்களில் ஈடுபடுத்துதல் போன்ற குறிக்கோள்கள் அடையப்படும் விதத்தில் கோழிக் குஞ்சுகளை கொள்வனவு செய்தல் மற்றும் நலனாளிகளைத் தேர்ந்தெடுத்தல் இடம் பெறாமையால் செயற்திட்டம் தோல்வியடைந்திருந்தது.

(ii) அலவ்வ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 12 தொண்டர் அமைப்புகளிற்கு ரூபா 391,044 பெறுமதியான பொருட்களும் உபகரணங்களும் 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான விபரங்கள் பதிவுசெய்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கனேவத்த பிரதேச செயலகப் பிரிவில் 2012 ஆம் ஆண்டின் வாழ்வாதார எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 42,800 பெறுமதியான 8,300 பலா மற்றும் மாஹோகனி மரக் கன்றுகளில் 4,786 கன்றுகளும்,ரூபா 70,500 பெறுமதியான 06 வகையான 1,650 பழக் கன்றுகளில் 626 கன்றுகளும் அழிவடைந்திருந்தன.

(iv) 2012 இன் பன்முகப்படுத்திய பாதீட்டின் மூலம் 12 சந்தர்ப்பங்களில் ரூபா 305,210 செலவிட்டு பொருட்களும் உபகரணங்களும் கனேவத்த பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு தொண்டர் அமைப்புகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றின் விபரங்கள் தொடர்பில் அக்கரை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) 5,000 ஆரம்பப் பாடசாலைகளை முன்னேற்றும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிங்கிரிய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தல்கஸ்பிடிய கனிஷ்ட வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தின் கூரையில் பொருத்தப்பட்டிருந்த வடிம்பு பலகைகளிற்கு இரண்டு முறை வர்ணம் பூசப்படாதிருந்ததுடன், பயன்படுத்தப்பட்டடிருந்த வடிம்பு பலகைகள் 03 இடங்களில் வெடிப்புற்றிருந்தன.

அத்துடன், கூரையில் இத்துப்போயிருந்த தாழ்வார பகுதியினை திருத்தம் செய்து உடைந்திருந்த ஓடுகளிற்குப் பதிலாக புதிதாக ஓடுகள் போடப்பட்டிருக்கவில்லை. போவத்த கனிஷ்ட வித்தியாலயத்தின் மேம்படுத்தல்களில் பிரதான மண்டபத்தின் 05 இடங்கள் வெடிப்புற்றிருந்ததுடன் அங்கு சில இடங்கள் சேதமடைந்திருந்தன.

(vi) 2012 இன் வாழ்வாதார எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிங்கிரிய பிரதேச செயலகப் பிரிவில் பகிர்ந்தளிப்பதற்காக 15,600 ஆபிரிக்க மாஹோகனி (காயா) கன்றுகள் ரூபா 97,600 போக்குவரத்து மற்றும் தொழிலாளர் கூலி செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. அக் கன்றுகளில் 88 சதவீதமான 13,734 கன்றுகள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு முன்னரும் பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னரும் அழிவுற்றிருந்தமையால் ரூபா 85,926 நட்டம் ஏற்பட்டிருந்தது. அத்துடன், மாவட்டச் செயலகத்தினால் ரூபா 26,840 செலவில் 2,000 கட்டு முருங்கை கன்றுகள் பிங்கிரிய பிரதேச செயலகத்தின் ஊடாக பகிர்ந்தளிக்கப்படுவதற்காக வழங்கப்பட்டிருந்தன. அக் கன்றுகள் நலனாளிகளிற்கு வழங்கப்படுவதற்கு முன்னர் அழிவடைந்திருந்தமையால் செய்யப்பட்டிருந்த செலவினமும் பயனற்றதாகியிருந்தது.

(vii) ஐயாயிரம் ஆரம்பப் பாடசாலைகளை முன்னேற்றும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வாரியபொல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வேபத்அங்க கனிஷ்ட வித்தியாலயத்தின் பழைய கட்டிடத்தினை அபிவிருத்தி செய்கையில் கட்டடிக் கூரையின் முகட்டினை உரிய பிரகாரம் மறைக்காமை காரணமாக கூரை இத்துப்போதல், மழை நாட்களில் வகுப்பறைகளிற்கு தண்ணீர் வருதல், மற்றும் தரைப்பகுதி தரமான விதத்தில் கொங்ரீட் செய்யப்பட்டிருக்காமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(viii) வாரியபொல பிரதேச செயலகப் பிரிவில் அச் செயற்திட்டத்தின் கீழ் மிரிஹானேகம கனிஷ்ட வித்தியாலயத்தின் கட்டிடத்தினை திருத்துவதற்காக 220 x20 மி.மீ. அளவுடைய பீலிப் பலகை 250 அடிகள் மதிப்பிடப்பட்டு அதற்காக பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக கழற்றி அகற்றப்பட்டிருந்த பலகைகளும் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், பொருத்தப்பட்டிருந்த பீலிப் பலகைகள் வெடிப்புற்றுமிருந்தன.

(ix) 2011/2012 ஆம் ஆண்டின் வாழ்வாதார எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வாரியபொல பிரதேச செயலகப் பிரிவில் 37 பாதுகாப்பு நாற்று கொட்டில்களை வழங்குவதற்காக ரூபா 3,041,999 செலவிடப்பட்டிருந்த போதிலும், அவற்றை

பராமரிப்பதற்காக நலனாளிகளிற்கு முறையான பயிற்சி வழங்கப்பட்டிருக்காமையால் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் அடையப்பட்டிருக்கவில்லை.

(x) 2012 ஆம் ஆண்டின் வாழ்வாதார எழுச்சி சமுர்த்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாஸ்பொத பிரதேச செயலக பிரிவில் பசுமை இல்லங்களில் பயிர்ச் செய்கை, காலான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, மாட்டுத் கொட்டில்களை நிர்மாணித்தல், அழகு மலர்ச் செய்கை மற்றும் அழகு மீன் வளர்ப்புக்காக ரூபா 1,473,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அழகு மீன் வளர்ப்புச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. எஞ்சிய 06 செயற்திட்டங்களிற்காக ரூபா 1,335,400 செலவிடப்பட்டிருந்த போதிலும், பின்தொடர் நடவடிக்கைகள் உரிய பிரகாரம் செய்யப்பட்டிருக்காமை காரணமாக நலனாளிகள் உற்சாகமிழந்திருந்தமையால் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை அடைய முடியாது போயிருந்தது.

(xi) 2013 சிறு போகத்தில் உப பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1,504 கி.கி. பயறு, மிளகாய், சோயா மற்றும் நிலக்கடலை விதைகள் மாஸ்பொத பிரதேச செயலக பிரிவிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் மிளகாய் தவிர்ந்த ஏனைய 03 பயிர்ச் செய்கைக்குரிய 228 கி.கி. விதைகள் நடப்பட்டிருக்கவில்லை. 34.34 ஹெக்டயர் நிலப்பரப்பில் எஞ்சிய பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், சீரற்ற காலநிலை காரணமாக 18.18 ஹெக்டயர் பயிர்ச்செய்கை சேதமடைந்திருந்தது.

## 1.11 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள்

இப்பாகமுவ பிரதேச செயலகத்தினால் பேணப்பட்ட இரண்டு நடைமுறைக் கணக்குகளில் முறையே ரூபா 20,322 மற்றும் ரூபா 2,891 மீதிகள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 15 ஆண்டுகள் மற்றும் 12 ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டன.

### (ஆ) சீராக்கப்பட வேண்டிய மீதிகள்

குருநாகல் மாவட்டச் செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களால் 2013 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில்

காண்பிக்கப்பட்டிருந்த சீராக்கல்களது பகுப்பாய்வின் பிரகாரம் 06 மாதத்திலிருந்து 01 ஆண்டு வரை வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாதிருந்த காசோலைகளின் பெறுமதி ரூபா 5,321 ஆகக் காணப்பட்டது. இது தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.12 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையானவையாகக் காணப்பட்டன. தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்டிருந்த அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) 2012 ஆம் ஆண்டின் கிராம எழுச்சி –"ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை" இன் கீழ் மாஸ்பொத பிரதேச செயலக பிரிவிலுள்ள குருநாகல் பிரதேச சபைக்குரிய 19 வீதிகளை கொங்கிரீட் செய்வதற்காக அரசாங்க பங்களிப்பாக ரூபா 18,456,659 செலுத்தப்பட்டிருந்த போதிலும்,ரூபா 79,458 ஆன மக்கள் பங்களிப்பால் நிறைவேற்றப்பட வேண்டிய இரு பக்கங்களிலும் மண்ணை நிரப்புதல் மேற்கொள்ளப்படாது அவற்றின் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தன.

(ii) மாவட்டச் செயலகத்தினால் மீளாய்வாண்டின் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 74,265 கூட்டுத் தொகைப் பெறுமதியுடைய மூலதனச் செலவினங்கள் மீண்டுவரும் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

### 1.13 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

(i) 2013 ஆம் ஆண்டிற்கான குத்தகை வாடகை மற்றும் மின்சாரத்திற்காக ரூபா 138,123 மொத்தமான தொகை அறவிடுதல் நிலுவையாகக் காணப்பட்ட குத்தகையாளருக்கு முறைப்படியான உடன்படிக்கையின்றி 2014 இன் முதல் 04 மாதங்களிற்காக மாவட்டச் செயலகத்தின் சிற்றுண்டிச் சாலையினை நடாத்திச் செல்வதற்காக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. பின்னர் முழு ஆண்டிற்கும் அந்த குத்தகையாளருக்கே ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(ii) மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான 33 உத்தியோகபூர்வ / பொதுச் சேவைகள் வதிவிடங்கள் தொடர்பான வாடகைப் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) வாரியபொல பிரதேச செயலகத்தினால் 15 ஓய்வுபெற்றோர்களிடமிருந்து உயிருடன் வாழ்கின்றமைக்கான சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளாது ஓய்வூதியம் வழங்கப்பட்டிருந்ததுடன், மரணமடைந்திருந்த 23 ஓய்வூதியம் பெறுவோர்களின் மரணமடைந்த திகதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கிராம உத்தியோகத்தர்களிடமிருந்து தேவையான சான்றிதழ்களும் பெறப்பட்டிருக்கவில்லை. அத்துடன், வாரியபொல பிரதேச செயலகத்தினால் 2013 ஆம் ஆண்டின் ஓய்வூதியம் தயாரிக்கப்படுகின்ற ஓய்வூதியம் பெறுவோர்கள் தொடர்பில் உரிய அறிக்கைகளை கிராம உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளாமையால் மரணமடைந்த 06 ஓய்வூதியம் பெறுவோர்களிற்கு ஓய்வூதியம் தயாரிக்கப்பட்டு 02 மாதங்கள் முதல் 09 மாதங்கள் வரையான காலவீச்சில் அவர்களது வங்கிக் கணக்குகளிற்கு ரூபா 464,333 தொகை அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, முழுமையான அங்கவீனம் காரணமாக ஓய்வூதியங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வருகை தராத ஓய்வூதிய உரித்தாளர்களிற்கு ஓய்வூதியம் செலுத்துதல் தொடர்பான தகவல்கள் கிராம உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.14 மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

2013 சனவரி முதல் நவம்பர் வரை மாஸ்பொத பிரதேச செயலகத்தின் வாகனமொன்றின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் சாரதியினால் மோசடியாகத் திருத்தப்பட்டிருந்ததுடன், அக்காலப்பகுதியில் வாகனத்தின் மைலோ மீற்றர் செயற்படு நிலையில் காணப்பட்டதாக பிரதேச செயலாளர் அறிவித்திருந்தார். 2013 பெப்ரவரி 27 ஆந் திகதி எரிபொருள் மீதி போலியாக நாளாந்த ஓட்ட அட்டவணைகளில் குறிப்பிட்டு 37.1 லீற்றர் எரிபொருளை மோசடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, 2013 மார்ச் முதல் மே இறுதி வரையான 07 நாட்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட 162.3 எரிபொருள் லீற்றர் ஓட்ட அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் கட்டளை இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 1.15 நட்டங்களும் இழப்புகளும்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்டிருந்த நட்டங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டின்போது கனேவத்த, வீரம்புகெதர மற்றும் மாவத்தகம பிரதேச செயலகங்களிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த 03 வாகனங்களிற்கு ஏற்பட்டிருந்த

ரூபா 2,166,360 இழப்பிற்கு காப்புறதியிலிருந்தும் பொறுப்புடைய நபர்களிடமிருந்தும் ரூபா 1,832,271 அறவிடப்பட்டிருந்த போதிலும், அது ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கனேவத்த பிரதேச செயலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த ஒதுக்கப்பட்ட வாகனமொன்றுக்கு மீளாய்வாண்டில் ஏற்பட்டிருந்த ரூபா 334,090 நட்டத்தைச் சாரதியிடமிருந்து மாதாந்தத் தவணையில் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் 02 மாதங்கள் தொடர்பில் ரூபா 55,682 அறவிடப்படாதிருந்ததுடன், உரிய ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் முடியவடையாமை காரணமாக குறித்த நட்டம் அறவிடப்படவில்லை என மாவட்டச் செயலாளர் அறிவித்திருந்தார்.

## 1.16 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த சிக்கனமற்ற முறையில் இடம்பெற்றிருந்த கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) கனேவத்த பிரதேச செயலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த வாகனங்களை திருத்துகையில் அகற்றப்பட்டிருந்த உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள் பிறிதொரு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குருநாகல் மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழுள்ள 30 பிரதேச செயலகங்களிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த வாகனங்களிற்கான எரிபொருள் நுகர்வை 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றிறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களின்படி, 06 மாதங்களிற்கு ஒரு முறை பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிவ்லலை.

## 1.17 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆம் ஆண்டில் மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளில் கிராம உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான உத்தியோகத்தர்கள் இல்லாமை காரணமாக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு செயலாளரின் 2011 ஆகஸ்ட் 12 ஆந் திகதிய HAF/3/ADMIN/CMA/15 ஆம் இலக்க கடிதத்தின் அறிவுறுத்தல்களிற்கு அமைய, பதிற் கடமைக்காக ஏனைய பிரிவுகளின் கிராம உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இருப்பினும், அவர்கள் தாபன விதிக்கோவையின் VII ஆம்

அத்தியாயத்தின் 12 மற்றும் 13 ஆம் பிரிவுகளிற்கு முரணாக அதிக காலமாக ஒரே பிரிவில் பதிற் கடமைக்காக நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) வாரியபொல பிரதேச செயலகத்தில் 2013 சனவரி முதல் ஆகஸ்ட் வரை அறவிடப்பட்டிருந்த ரூபா 40,495 தொகையான மணல்/ மண்/ கிரவல் அகழ்வு/ போக்குவரத்து போன்ற அனுமதிப்பத்திரக் கட்டணங்களை புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க அகழ்வு பணியகத்திற்கு அனுப்பிவைத்தல் உரிய காலத்தில் இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) மாஸ்பொத பிரதேச செயலக பிரிவினால் ஓய்வூதியங்கள் தயாரிக்கப்பட்டிருந்த 23 நபர்களிற்கு ரூபா 2,741,893 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த தொகைகள் மீள அறவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அறவிடப்படும் முறை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் மீளாய்வாண்டின் இறுதியளவில் இடமாற்றப்பட்ட, மரணமடைந்த, ஓய்வுபெற்ற, பதவி நீக்கப்பட்ட மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட 24 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2,003,450 நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.18 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குருநாகல் மாவட்டச் செயலகத்தினாலும் 30 பிரதேச செயலகங்களினாலும் வழங்கப்பட்டிருந்த தகவல்களின்படி, பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 116 | 110 | 07 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 79 | 62 | 19 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 3,159 | 2,609 | 565 | 15 |
| (iv) | ஆரம்ப நிலை | 345 | 284 | 61 | - |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 02 | 11 | - | 09 |
| | மொத்தம் | 3,701 | 3,076 | 652 | 27 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 625 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாவட்டச் செயலகம் தவறியிருந்தது.

(ஆ) குளியாபிடிய (கிழக்கு) பிரதேச செயலகத்தின் சிரேஷ்ட நிலையிலுள்ள ஒரு உத்தியோகத்தர், குளியாபிடிய (மேற்கு) மற்றும் நிகவெரட்டிய பிரதேச செயலகங்களின் மூன்றாம் நிலையிலுள்ள இரண்டு உத்தியோகத்தர்கள், இப்பாகமுவ மற்றும் குளியாபிடிய (மேற்கு) பிரதேச செயலகங்களின் இரண்டாம் நிலையிலுள்ள 15 உத்தியோகத்தர்கள், இப்பாகமுவ, கனேவத்த, கிரிபாவ, குளியாபிடிய (கிழக்கு), பொல்கஹவல, நிகவெரட்டிய, வீரம்புகெதர மற்றும் பமுனாகொடுவ பிரதேச செயலகங்களில் ஏனைய 09 ஊழியர்களும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பிற்கு புறம்பாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) மல்லவபிட்டிய மற்றும் மஹவ பிரதேச செயலகங்களில் இரண்டாம் நிலையிலுள்ள இரண்டு உத்தியோகத்தர்கள், இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட பதவியணியில் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்ததுடன், பொல்கஹவல பிரதேச செயலகத்தின் இரண்டாம் நிலையிலுள்ள ஒரு உத்தியோகத்தர் இரண்டு ஆண்டு காலத்திற்காக சம்பளமற்ற வெளிநாட்டு கற்கை விடுமுறையினை பெற்றிருந்தார்.